**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எந்த நூற்றாண்டில் கல்வெட்டு எழுத்துப் பயன்படத் தொடங்கியது?
2. எவ்வுயிர் எழுத்து சொல்லின் இறுதியில் வருவது கிடையாது?
3. சொல்லெழுத்துக்கான நூற்பா எந்த நூலில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது?
4. பழங்காலத் தமிழில் இருந்த காலங்கள் எத்தனை? அவை யாவை?
5. இடைக்காலத்தில் சேர்க்கப்பட்ட கிரந்த எழுத்துகள் எத்தனை?
6. நான் என்பது முதன்முதலில் வருகின்ற நூல் எது?
7. தமிழில் உள்ள சுட்டெழுத்துகள் யாவை?
8. சங்ககால இலக்கியங்களில் வழங்கும் சொல்லுருபுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
9. தற்காலத்தில் அமைந்துவரும் எதிர்கால இடைநிலைக்கான சான்றுகள் தருக.
10. சொல்லும் பொருளும் குறித்துத் தொல்காப்பியர் கூறுவது யாது?
11. தமிழில் வழங்கும் எதிரொலிச் சொற்களுக்குச் சான்றுகள் தருக.
12. தமிழில் உள்ள ஒலிகளை எத்தனை வகையாகப் பிரித்துள்ளனர்?
13. தால் நடு உயிர் ஒலிகள் யாவை?
14. கோஒன் என்ற சொல் சங்க காலத்தில் எவ்வாறு வழங்குகிறது?
15. கொடுந்தமிழ் நாடுகள் எத்தனை?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. முதன் முதலில் எழுத்தாக்கம் எங்கெங்கு ஆரம்பமாயிற்று?
2. எக்காரணங்களால் எழுத்தின் வருகையில் மாறுதல் ஏற்பட்டது?
3. மரபு இலக்கண அறிஞர்கள் தமிழ்ச்சொற்களை எத்தனை வகையாகப் பிரித்தார்கள்? அவை யாவை?
4. இடைக்காலத்தில் இருந்த நிகழ்கால இடைநிலைக்கான சான்றுகளைக் காட்டுக.
5. இலக்கணத் தொழிற்பாடு என்றால் என்ன?
6. சொற்பொருள் மாற்றத்திற்கான காரணங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
7. ஐகாரம் சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய நிலைகளில் வருவதற்கு ஒவ்வொரு சான்று தருக.
8. வருடொலி என்றால் என்ன?

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) எழுத்து வருகை வரலாறு குறித்து கட்டுரை தருக.

   (அல்லது)

   (ஆ) வரலாற்று நோக்கில் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து எழுதுக.

2. (அ) பதிலிடு பெயர்களின் வகைகளை விளக்குக.

   (அல்லது)

   (ஆ) பழந்தமிழ் இலக்கண நூல்களில் சொல்லும் பொருளும் குறித்து எழுதுக.

3. (அ) உயிர் ஒலிகள் தோன்றி வளர்ந்த வரலாறு பற்றி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) தற்காலத்தில் கிளைமொழிகள் குறித்து கட்டுரை தருக.

***